Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 122 · புதன்கிழமை Wednesday · 04.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹6 · ஈரோடு Erode

# முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு நிதி ரூ.2 ஆயிரம்

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை: தமிழகத்தில் உள்ள முதியோர், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் உள்ளிட்ட விளிம்பு நிலை மக்களுக்கு சிறப்பு நிதியாக ரூ.2 ஆயிரம் ரொக்கத்தை அவர்களின் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்து உள்ளார்.இதன்மூலம் 37.79 லட்சம் பேருக்கு ரூ.2000 சிறப்பு நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

ஏற்கனவே,கலைஞர் உரிமைத் திட்டத்தின் கீழ் கோடைக்கால சிறப்புத் தொகுப்பாக ரூ.2000 அண்மையில் வழங்கப்பட்ட நிலையில்,தற்போதுவிளிம்பு நிலை மக்களுக்கும் சிறப்பு நிதி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "கலைஞர்மகளிர் உரிமைத்திட்டத்தில் பெண்களுக்குக் கோடைக்காலச் சிறப்புத்தொகுப்பாக 2ஆயிரம் ரூபாய் வழங்கியது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதியத் உதவித்தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தகைய சிறப்பு நிதியை வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தன.

நம்பிக்கையுடன் அவர்கள் வைத்த கோரிக்கையை இன்று நிறைவேற்றியுள்ளோம். நலிவு நிலை போக்கும் சிறப்பு நிதியாக 2,000 ரூபாயை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளோம். இதன்படி, பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள் என, மொத்தம் 29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளிகளுக்கு தலா 3200 ரூபாயும், 5 லட்சத்து 92 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 3500 ரூபாயும், பராமரிப்பு உதவித்தொகை பெற்றுவரும் 2 லட்சத்து 58 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு, தலா 4000 ரூபாயும் இன்று காலை வழங்கியிருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலத்திற்கான மீன்பிடித் தடைகால உதவித்தொகையாக, குடும்பம் ஒன்றுக்கு ரூ.8000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நீலகிரி மாவட்டத்தைச்சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்குக் கிலோ இரண்டு ரூபாய் ஆதார விலை என 8.53 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் மீண்டும் ஒருமுறை சூளுரைக்கிறேன் - தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம்" என தனது அறிக்கையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால், மகளிர் உரிமைத்தொகையை உரியவர்களுக்கு வழங்க, சிலர் முட்டுக்கட்டை போட வாய்ப்புள்ளதாக கூறி, அடுத்த 3 மாதங்களுக்கான தொகையான ரூ.3 ஆயிரத்தை பயனாளர்களின் வங்கிக்கணக்கில் தமிழக அரசு கடந்த மாதம் செலுத்தியது. அதனுடன் சேர்த்து, கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ.2 ஆயிரம் என மொத்தம் ரூ.5,000-ஐ தமிழக அரசு வழங்கியது.

அதே சமயத்தில், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்கிற பயத்தில்தான், இந்த பணத்தை மக்களுக்கு கொடுப்பதாக அதிமுக, பாஜக, தவெக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்தது குறிப்பிடத்தக்கது.

# மத்திய அமைச்சர் அமித்ஷா உடன் பேசியது என்ன?

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில்



டெல்லியில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி சற்றுமுன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், மத்திய உள்துறை அமைச்சர்அமித்ஷாவை சந்தித்து பேசினோம். தேர்தலில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றி மட்டும் கலந்து ஆலோசித்தோம். சில கட்சிகள் பேச்சுவார்த்தையில் இருக்கின்றன. அவை வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றார். சசிகலாவின் புதிய கட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையுமா? அதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியானதே?

அதுபற்றி கேள்வி எழுப்புகையில், அப்படி எதுவும் பேசவில்லை. வேறு கேள்விக்கு செல்லலாம் என்று கூறி முற்றுப்புள்ளி வைத்தார். தொடர்ந்து பேசுகையில், எங்கள் கூட்டணி மிகச் சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது. தொகுதி பங்கீடு தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும். இன்னும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தல் தேதியே அறிவிக்கப்படவில்லை.

தேதி அறிவித்தால் தான் சில அறிவிப்புகளை வெளியிட முடியும். எங்கள் கூட்டணி சுமூகமாக செல்கிறது.

திமுக கூட்டணியில் தான் குழப்பம் இருக்கிறது.திமுகவிற்கும்,காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் பிரச்சினை இருப்பதை ஊடகங்களில் வரும் செய்திகளை வைத்து கணிக்க முடிகிறது. அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் ஒன்றாக செயல்பட்டு வருகின்றன. இந்த கூட்டணி வரும் சட்டமன்றத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் என்.டி.ஏ கூட்டணிக்கு தலைமை வகிக்கும் அதிமுக மற்ற கட்சிகளுக்கு எவ்வாறு தொகுதிகளை பிரித்து கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு நீடித்து வருகிறது. ஏனெனில் கூடுதல் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்றும், இரட்டை இலக்கத்தில் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.கூட்டணியில் பெரிய கட்சியாக இருக்கும் பாஜகவிற்கும் இதே டிமாண்ட் தான். நேற்று முன்தினம் இதுதொடர்பாக மதுரையில் தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலுடன் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சூழலில் நேற்று காலை டெல்லி புறப்பட்டு சென்றார். அங்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து பேசினார். அதில் பாஜகவிற்கு ஒதுக்கப்படும் தொகுதிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பாஜகவின் டிமாண்ட் என்பது 35 தொகுதிகள் வரை நீள்கிறது. ஆனால் கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்டு 4ல் மட்டும் வெற்றி பெற்றிருந்தனர். எனவேவெற்றிவாய்ப்பை கருத்தில்வைத்து தொகுதிகளை ஒதுக்கஎடப்பாடி பழனிசாமி திட்டமிட்டுள்ளார்.

ஆனால்பாஜககூடுதல் தொகுதிகளில் கறாராக டீலிங் செய்து கொண்டிருக்கிறது.

மேற்கு மண்டலம், தென் மாவட்டங்கள், வடக்கில் நகர்ப்புற தொகுதிகளில் நல்ல செல்வாக்கு பெற்றவை ஆகியவற்றுக்கு பாஜக குறிவைத்திருக்கிறது. ஆன்மீக தலங்கள் நிறைந்த தொகுதிகளும் இதில் அடங்கும் என்ற பேச்சு உண்டு. ஆனால் அதிமுகவின் கணக்கு வேறாக உள்ளது. நிச்சயமான வெற்றி வாய்ப்புள்ள இடங்களை தேடி பிடித்து பாஜகவிற்கு ஒதுக்க திட்டமிட்டு வருகிறது. அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் தீவிர உழைப்பால் வெற்றியை உறுதி செய்வோம். சீட் பேரத்தை சற்று குறைத்து கொள்ளுங்கள் என்று டீல் பேசி வருகிறது. இத்தகைய சூழலில் டெல்லியில் அமித் ஷா உடன் நடந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெற்று உள்ளது.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடன்

# காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் பேச்சுவார்த்தை



சென்னை: திமுக - காங்கிரஸ் இடையே கூட்டணி குறித்த குழப்பம் நீடிக்கும் நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் (மார்ச் 3) திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக திமுக - காங்கிரஸ் கூட்டணியில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. கடந்த சில வாரங்களாகவே ஆட்சியில் பங்கு வேண்டும்,அதிகதொகுதிகள் வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்கள் பேசியது பரபரப்பை உருவாக்கியது.இன்னும்சிலதலைவர்கள் தவெக தரப்பிலும் பேசி வந்தது அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது.

கடந்த சில நாட்களாகவே காங்கிரஸ் மற்றும் திமுக இடையே பல கட்ட பேச்சுவார்த்தை நடந்தும், இறுதி முடிவு எட்டப்படாததால் கூட்டணியில் பெரும் குழப்பம் நிலவியது. மேலும், காங்கிரஸ் கட்சி திமுக கூட்டணியில் நீடிக்குமா அல்லது தவெக பக்கம் செல்லுமா என்று பரபரப்பும் நிலவியது. காங்கிரஸ் தரப்பில் திமுகவிடம் 36 தொகுதிகளும், 2 ராஜ்ய சபா சீட்டும் கேட்டு வருவதாக சொல்லப்படுகிறது.அதே நேரத்தில், திமுக கடந்த முறை கொடுத்த 25 தொகுதிகளை அளிப்பதாக தொடர்ந்து சொல்லி வந்தது. இதனால், திமுக மற்றும் காங்கிரஸ் பேச்சுவார்த்தைக் குழுக்களுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையானது கிட்டத்திட்ட முடங்கிப்போனது.

இதனையடுத்து,திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப.சிதம்பரம் மற்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் இன்று மதியம் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.இந்தப்பேச்சுவார்த்தையின் போது திமுக எம்.பி. கனிமொழியும் உடனிருந்தார்.

பேச்சுவார்த்தையின் போது திமுக 29 சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் இரு ராஜ்ய சபா சீட் கொடுக்க ஒப்புக்கொண்டதாகவும்சொல்லப்படுகிறது. பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ப.சிதம்பரம் செய்தியாளர்களை சந்திக்கவில்லை. இந்தப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடிந்ததாகவும், திமுக தலைவருடனான பேச்சுவார்த்தை குறித்து சிதம்பரம் ராகுல் காந்தியிடம் விவரங்களை தெரிவிப்பார் என்றும், ராகுல் காந்தி விரைவில் முடிவை அறிவிப்பார் என்றும் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், "அவர்கள் (காங்கிரஸ்) கேட்பது வேறு,நாம் (திமுக)சொல்வது வேறு. திமுக - காங்கிரஸ் கூட்டணிவிவகாரத்தை சுமுகமாக முடிக்கவே எங்கள் தலைவர் (முதல்வர் ஸ்டாலின்) விரும்புவார். காங்கிரஸார் இப்போது பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறார்கள் என்றாலே பழைய நிலைப்பாட்டில் இருந்து மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள். இன்று மாலைக்குள் நல்ல செய்தி வரும்" என்றார்.

முன்னதாக, கே.சி. வேணுகோபால் மற்றும் கிரிஷ் சோடங்கர் ஆகியோர் காங்கிரஸ் எம்.பி., எம்.எல்.ஏ-க்களுடன் காணொலி வாயிலாக அவசர ஆலோசனை நடத்தினார்கள். "திமுக 25 இடங்களைத்தான் தருகிறது, நாம் என்ன முடிவு எடுக்கலாம்?" எனக் கேட்டதற்கு, எம்.எல்.ஏ-க்கள் தரப்பில், "நாம் கூட்டணியை விட்டு வெளியேறினால், அது பாஜக தமிழகத்தில் காலூன்ற நாமே சிவப்புக் கம்பளம் விரிப்பது போலாகிவிடும்.

நடிகர் விஜய்க்கு எவ்வளவு வாக்கு வங்கி இருக்கிறது என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.சொந்தக் கட்சிக்கே பிரசாரத்திற்கு வராத அவர், புதுச்சேரி மற்றும் கேரளாவில் காங்கிரஸிற்காக வருவாரா என்பது சந்தேகமே. எனவே, தவெகவுடன் கைகோர்ப்பது இப்போதைக்குச் சரியாக இருக்காது.முதல்வரிடம் பேசி கூடுதல் இடங்களைப் பெற முயற்சிப்பதே அரசியல் ரீதியாகச் சரியான முடிவாக இருக்கும். இருப்பினும், தலைமை எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட்டுப் பணியாற்றத் தயார்" எனத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## அச்சிறுப்பாக்கம் அருகே
## பள்ளிக்கட்டிடம், நியாய விலை கடை, நேரடி கொள்முதல் நிலையம், அங்கன்வாடி கட்டிடம் திறப்பு விழா
### சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் அருகே களத்தூர் அன்னங்கால்



ஒரத்தி தின்னலூர் அனந்தமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளி கட்டிடம் நியாய விலை கட்டிடம் சிமெண்ட் சாலைகள் ஊராட்சி மன்ற கட்டிடம் அங்கன்வாடி கட்டிடம் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அச்சரப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே.கண்ணன் அவர்களின் ஒருங்கிணைப்பில் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்தரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க. சுந்தர் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் டி.வி கோகுலகண்ணன் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் சிவகுமார் மாவட்ட கவுன்சிலர்கள் வசந்தா மாலதி .ஒன்றிய கவுன்சிலர்கள் பார்த்தசாரதி. தின்னலூர் ராஜசேகர். தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் ரத்தினவேல், ஒரத்தி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஓ.பி.சி மாறன் தெற்கு ஒன்றிய இளைஞரணி க.பிரகாஷ், ஒன்றிய துணை செயலாளர் ரகு. ஊராட்சி மன்ற தலைவர்கள் களத்தூர் திலகம் செல்லப்பன், அண்ணங்கால் சிவா, அனந்தமங்கலம் பாரதி பாபு, கீழ் அத்திவாக்கம் செல்லப்பன், மற்றும் மகளிர் அணி அமைப்பாளர் தேவி, உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



சிவகங்கை 02 03 26, கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லுரியின் ஐந்தாம் நாள் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் பேயன்பட்டி கிராமத்தில் (02032026) மிகச்சிறப்பாக நடைபெற்றது. "கிராமப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாடு" என்பதை மையக்கருத்தாகக் கொண்டு மாணவ, மாணவியர் களப்பணியாற்றினர். முகாம் நிகழ்வில் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. திருக்குமரன் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். நாச்சியப்ப சுவாமிகள் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் SP. சரவணன் அவர்கள் ' வாக்கின் முக்கியத்துவமும் வாக்காளர் விழிப்புணர்வும் ' என்ற பொருண்மையில் சிறப்புரையாற்றினார். பின்னர் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு ஆ. நிஜந்தன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். அதன் பின்னர் கிராமத்திலுள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவிலையும் அதனை சுற்றியுள்ள பகுதியையும் மேலும் கிராமத்தில் உள்ள தேவாலயத்தையும் அதனை சுற்றியுள்ள பகுதியையும்நாச்சியப்பசுவாமிகள்கலைஅறிவியல்கல்லூரியின்நாட்டுநலப்பணித்திட்ட மாணவ, மாணவியர் தூய்மை செய்தனர்.

## சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில்
## சார்பு நீதிமன்றம் அமைக்கக்கோரி வழக்கறிஞர்கள் 2 நாட்கள் அடையாள உண்ணாவிரதம்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட உரிமையியல், குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றங்கள் செயல்படுகிறது.

மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால், இங்கு மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றங்கள் அமைக்கவேண்டும் என வழக்கறிஞர் சங்கம் மற்றும் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை வைத்து வந்தனர்.

உள்ளநீதிமன்றவளாகத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான உத்தரவை ஏற்கனவே தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது அந்த சார்பு நீதிமன்றம் அமைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் காரைக்குடி நீதிமன்ற வளாகத்திற்குள் இன்று வரை சார்பு நீதிமன்றம் அமைக்கப்படவில்லை.

எனவே காரைக்குடி நீதிமன்ற வளாகத்திற்குள் உடனடியாக சார்பு நீதிமன்றத்தை அமைத்திட தமிழக அரசை வலியுறுத்தி காரைக்குடி வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் இன்றும் நாளையும் 03.03.2026 ஆகிய இரண்டு நாட்கள் காரைக்குடி நீதிமன்ற வாயில் முன்பு மாபெரும் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்று வருகிறது.இந்த போராட்டத்தில் காரைக்குடியில் உள்ள வழக்கறிஞர்கள் சங்கம், சட்ட கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில் வணிக கழகம்,ஆகியோர்கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டத்திற்கு உட்பட்ட கீழக்குறிச்சி மேல குறிச்சி ஆதி திராவிடர் வசிக்கும் பொது மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என்று தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி கணேசன் அவர்களிடத்தில்கோரிக்கை மனு அளிக்கப்பட்டது

## அண்ணா அறிவாலயத்தில் சட்டமன்றத்தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தார் முன்னாள் எம்.எல்.ஏ. மாரியப்பன் கென்னடி



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மானாமதுரை நகர் மன்ற தலைவருமான திரு எஸ். மாரியப்பன் கென்னடி அவர்கள் சென்னையில் அமைந்துள்ள திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் தனது விருப்ப மனுவை வழங்கினார். மாரியப்பன் கென்னடி அவர்கள் முன்னாள் அமைச்சர்,கரூர்மாவட்ட செயலாளர் மற்றும் சட்டமன்றஉறுப்பினருமான திரு செந்தில் பாலாஜி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினருமான கே. ஆர். பெரியகருப்பன் ஆகியோரின் தீவிர ஆதரவாளராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் குறுகிய காலத்தில் அறிமுகமாகி வாக்காளர் பெருமக்களின் நன்மதிப்பையும், செல்வாக்கையும் வெகுவிரைவில் பெற்றவராக கண்டறியப்படுகிறார். நடைபெற இருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகவும் பொதுமக்களுக்கான சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விருப்ப மனு அளித்துள்ளார். தனது விருப்பமனுவை அளித்த பின்னர் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் அவர்களை மரியாதை நிம்மதமாக மாரியப்பன் கென்னடி சந்தித்துள்ளார். இந்நிகழ்வின்போது சிவகங்கை மாவட்ட திமுக துணை செயலாளர் சேங்கைமாரன் மற்றும் சிவகங்கை மாவட்ட திமுகநிர்வாகிகள் உள்ளிட்டோர்உடன்இருந்தனர்.

## சேது பாஸ்கரா வேளாண் கல்லூரியில் உழவர் கண்காட்சி



காரைக்குடி அருகே விசாலயன் கோட்டை கலாம்கவிகிராமம்,சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரியில் உழவர் கண்காட்சி சிறப்பாக நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பேராசிரியர். மோனி மாடசாமி,

முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை மற்றும் மின் – ஆளுமை ஆராய்ச்சி ஆய்வுகள் மையம் (CAIRS) மற்றும் திரு. R.ஜெகநாதன்,நல்ல கீரை நிறுவனர் மற்றும் இயக்குனர் ஆகியோர் கலந்துகொண்டுநிகழ்ச்சியை சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினர்கள் வேளாண் கண்காட்சியை துவக்கி வைத்து மாணவர்களின் வேளாண் மாதிரிகளை மதிப்பீடு செய்து புதுமையான யோசனைகளை வழங்கினர். மேலும் நிகழ்ச்சியின் அங்கமாக சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் சோபித் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அது மட்டுமல்லாமல் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்களான, புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம், திருவாடானை நெற்களஞ்சியம் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் சிவகங்கை மாவட்ட கருப்பு கவுனி நெல் பாதுகாப்பு மற்றும் உழவர் நலச்சங்கம் ஆகியவற்றிற்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

## கடையம் முதல் தென்காசி வரை பேருந்து வசதி
## கடையம் ஊராட்சி ஒன்றிய ஆத்மா சேர்மன் குணசீலன் நன்றி தெரிவித்தார்

கடையம் முதல் தென்காசி வரை 27 E ( பழைய எண்16) என்கிற பேருந்து செக்கடியு ர் அருணாசலம் பட்டிசேர்வைக்காரன்பட்டி,கட்டேரிபட்டி,புங்கம்பட்டி மயில்புரம் அழகம் பெருமாலூர் மாடியனூர்



ஆவுடையானூர்ர் கொண்டலூர் திப்பணம்பட்டி மலையராமபுரம் பாவூர்சத்திரம் வழியாக அந்த பேருந்து தென்காசி சென்று வருகிறது

கடந்தசிலநாட்களாகபுங்கம்பட்டி ஊருக்குவடபுறம் பாலம்வேலைநடைபெற்று வருவதால்அந்தவழியாக பேருந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

பாலம் கட்டும் இடத்தின் அருகே மேல்புறம் டிரான்ஸ்பார்மரும் கீழ்புறம் கடை கட்டிடங்களும் இருக்கின்ற காரணத்தினால் தனி வழிப்பாதை அமைக்க முடியவில்லை இதனால் அந்த பேருந்து கடையத் தில் இருந்து நேரடியாக புலவனூர் மேட்டூர் வெய் க்கால்பட்டி அரியபுரம் வழியாக செல்கிறது இதனால் செக்கடியூர் அருணாசலம் பட்டி சேர்வைக்காரன்பட்டி கட்டேரி பட்டி கீழ சேர்வைக்காரன் பட்டி பகுதி மக்கள் மற்றும் பள்ளி மாணவிகள் குறித்த நேரத்தில் பள்ளிக்கு செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர்

நேற்று காலை அட்மா சேர்மன் குணசீலன் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் பொதுக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் ஆகியோர் என்னிடத்தில் பள்ளி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் படும் கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்கள் .

நான் உடனடியாக சம்பந்தப்பட்ட போக்குவரத்து துறை தென்காசி கிளை மேலாளர் அவர்களிடம் பேசி பஸ் வர ஏற்பாடு செய்தேன்

அவர் பஸ் அந்த ரூட்டில் வரமுடியாது என்று சொல்கிறார்கள் என்கிற காரணத்தை சொன்னார் உடனடியாக தங்களது கிளையிலிருந்து அலுவலர்களை அனுப்பி ஆய்வு செய்ய கேட்டேன் அதன்படி ஆய்வு செய்யப்பட்டது அந்த வழித்தடத்தில் பஸ் செல்லலாம் என்று சொன்னதின் பேரில் நேற்று மாலையிலேயேஅந்தவழித்தடத்தில்பள்ளிநேரத்தில் மாணவிகள் பயன்பெறும் வகையில் பஸ் இயக்கப்பட்டது அந்தப் பேருந்து தொடர்ந்து இன்றும் காலையில் பள்ளி மாணவிகளை வழக்கம் போல் ஏற்றி செல்லும் வகையில் இயக்கப்பட்டது. ஊர் நிர்வாகிகள் ,அட்மா சேர்மன் குணசீலன் சரி உக்காரம்பட்டி ஊராட்சிமன்றதலைவர்ரவிச்சந்திரன் மாவட்டபிரதிநிதிதுரைப்பாண்டியன்விடியல்ஆர்த்தி முருகன் ஆகியோர்கள் நன்றி தெரிவித்தனர்.

உடனடியாக நடவடிக்கை எடுத்து பள்ளி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டுபேருந்தஇயக்கியதென்காசிபோக்குவரத்து பணிமனை கிளை மேலாளர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன்

## கோவையில் சிட் பண்ட் என்ற பெயரில் நிதி நிறுவனம் நடத்தி
## இஸ்லாமிய பெண்களிடம், லட்சக்கணக்கில் பண மோசடியில் ஈடுபட்ட சிட் பண்ட் நிறுவனம்
### மாநகர காவல் ஆணையரிடம் மனு அளித்த பொதுமக்கள்..



கோவைஉக்கடம்புல்லுக்காடுபகுதியைசேர்ந்தவர் நஜிமுநிஷா. 55 வயதான இவர் இன்று தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமையில் மாவட்ட காவல் ஆணையர் அலுவலகத்தில் ஆணையரை சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கூறியதாவது.. கோவை உக்கடத்தை சேர்ந்த நஜிமுநிஷா மற்றும் அதே பகுதியை சேர்ந்த இஸ்லாமிய பெண்கள் பலரிடம், சீயான் சிட் பண்ட் என்ற தனியார் நிதி நிறுவனத்த்தை சேர்ந்தவர்கள் அதிக லாபம் ஆசை வார்த்தை கூறி, லட்ச கணக்கில் பணத்தை பெற்றுள்ளனர்.தினசரி,மற்றும் வாராந்திர சீட்டு முறையில் வசூலிக்க பட்ட பணத்தை இந்த நிதி நிறுவனம் திரும்ப தராமல் ஏமாற்றி வருகின்றது. சீட்டு முடிந்தும், பணத்தை திரும்ப தராமல் உள்ளது. பணத்தை திரும்ப கேட்டால் உரிய பதில் தராமல் இழுத்தடித்து வருகின்றதாகவும், இது சம்பந்தமாக அலுவலகத்திற்க்கு சென்றால் அலுவலகம் பூட்டிய நிலையிலேயே உள்ளது. எனவே மாநகர காவல் ஆணையர் கண்ணன், இந்த விஷயத்தில் தலையிட்டு உடனடியாக பாதிக்கபட்ட பெண்களின் பணத்தை திருப்ப பெற்று தர வேண்டும் என்று மனு அளித்துள்ளதாக தெரிவித்தார் . மேலும் இந்த நிதி நிறுவனம் தற்போது வரை தினசரி வசூலில் ஈடுபட்டு வருகின்றதாகவும், மேலும் பெண்கள் பாதிக்கப்பட கூடாது உடனடியாக காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தா திவ்யா, பிரபாகரன், ராதாகிருஷ்ணன் நஜிபுநிஷா, முகமது, ருபீனா, சம்சீரா, அபு, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக சிறுத்தை பாலு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி 4,5,10வது வார்டு பகுதி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது

தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி 4,5,10வது வார்டு சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் காங்கிரஸ் வடக்கு பகுதி மண்டல தலைவர் செ.மைக்கேல் பிரபாகர் தலைமையில் செயின்ட் தாமஸ் பள்ளி ரவுண்டானா அருகில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட தலைவர் எஸ். எம்.சகாயராஜ் முன்னிலை வகித்தார். 4வது வார்டுதலைவர்ராஜாரத்தினம், 10வது வார்டு தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினர் கூட்டத்தில் காமராஜர் வழி வந்த காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும், வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்து கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. மகிளா மாநில அமைப்பாளர் ஜெயஜோதி நன்றியுரை ஆற்றினார். உறுப்பினர் சாமுவேல் ஞானதுரை, பிபிசி உறுப்பினர் சபரி ஆனந்தம், வழக்கறிஞர் அணி நேரு பர்னபாஸ், மாவட்ட தலைவர் கீபோர்ட் காங்.தலைவர் மரிய ஆல்வின், ஆராய்ச்சி துறை சிவராஜ் மோகன், மாவட்ட பொது செயலாளர் இக்னேசியஸ், மாவட்ட துணை தலைவர்கள் ஏ.டி.பிரபாகர், ராஜாராம்,கண்ணன்,பிரியங்கா காந்தி, மாநில பேச்சாளர் சுதன் குமார், ஐஎன்டியுசி ஹாசன், மேற்கு மண்டல இளைஞர் காங்.தலைவர் கமலாதேவி, செல்வராஜ், பார்த்திபன் தனுஷ், அமைப்பு சாரா மகளிர் அணி தலைவி சாந்தி மேரிஜேசுபாக்கியம், எட்வர்ட்ராஜ், நேரு காலனி ஆறுமுகம், மகிளா காங். வசந்தி, அமுதா, செல்வமணி, மேற்கு மண்டல மகளிர் அணி அஸம்பாத், 22வது வார்டு தலைவர் கருப்பசாமி, சி.எம்.ஜெ. மாரியப்பன் ஜெபமாலை ராஜ் 5வது வார்டு துணைத்தலைவர் ரதன், 20வது வார்டு துணை தலைவர் மாரியப்பன், 21வது வார்டு தலைவர் நெல்சன், 10வது வார்டு அபிஷேக், 10வது வார்டு செயலாளர் காமராஜ், பொருளாளர் மரிய சிங்கம், 4வது வார்டு துணை தலைவர் ராஜகோபால், 4வது வார்டுதுணைசெயலாளர் டோமினிக், 4வது வார்டு பொருளாளர் சக்திவேல், யோகா ராணி, 4வது வார்டு முருகேசன், வார்டு தலைவர் பால், ஜான்சன், குட்டி காளை, இசக்கியம்மாள், மகளிர் அணிபரமசக்தி,தினகரன், சிதம்பரம், 5வது வார்டு எபனேசர், அண்ணாதுரை, முருகேசன், 10வது வார்டு புஷ்பா, சதீஷ், மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத்தேர்தலில்போட்டியிடதனதுவிருப்பமானவைதனதுஆதரவாளர்களுடன் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் திரு ஏ. ஆர். ஜெயமூர்த்தி அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுவை அளித்தார். கூட்டுறவுத்துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் திரு கே. ஆர். பெரியகருப்பன் அவர்களின் தீவிர ஆதரவாளரான ஜெயமூர்த்தி அவர்கள் இருந்து வருகிறார். மேலும் ஜெயமூர்த்தி அவர்கள் மாவட்ட அறங்காவலராக இருந்து வரும் நிலையில், இளைஞர்கள் பெரியளவில் ஆதரவு அளித்து வருகின்றனர். அதன் பின்னர் மரியாதை நிமித்தமாக கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை ஜெயமூர்த்தி தனது ஆதரவாளர்களுடன் சந்தித்தார்.

## அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் மாணவிகளுக்கு போட்டி, வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது




காரைக்குடி KIT & KIM கல்லூரியில் 27.02.2026 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற KIM FESTO 2026 இல் அழகப்பா அரசு மாணவிகள் நடனம், மௌன நாடகம் மற்றும் தனிப்பாடல் போட்டிகளில் கலந்து கொண்டனர். நடனப் போட்டியில் இளங்கலை ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு மாணவிகள் விஷாலி, அவீனா, ஸ்ரீநிதி, ஜெர்லின் ரீனா, இந்து ஆகியோர் மூன்றாம் பரிசு பெற்றனர். சிவகங்கை மாவட்டம் மை பாரத் கேந்திரா மற்றும் அழகப்பா பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து புதுவயல் வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 28.02.2026 சனிக்கிழமை அன்று நடத்திய பேச்சுப்போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவி மாதரசி முதலிடத்தையும் வணிகவியல் மூன்றாமாண்டு மாணவி சார்மதி இரண்டாமிடத்தையும் வணிகவியல் இரண்டாமாண்டு மாணவி ஸ்ரீநிதி ஐந்தாம் இடத்தையும் பெற்று மாநில அளவிலான பேச்சுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். வெற்றி பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவிகளைக் கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி, நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வமீனா, உறுப்பினர்கள் முனைவர் லெட்சுமணக்குமார், பேராசிரியர் ஷர்மிளா ஆகியோர் பாராட்டினர்.

## சிவகங்கையில் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி




பள்ளிக்கல்வித்துறையின் மகிழ் முற்றம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை புனித மைக்கேல் பதின்ம மேல்நிலைப் பள்ளி இணைந்து மாவட்ட அளவிலான மைக்கேல் அறிவியல் கண்காட்சி விழாவை சிறப்பாககொண்டாடினர். மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளிலிருந்து அறிவியல் கண்காட்சியில் மாணவ மாணவிகள் தங்களின் படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர். நடுவர்களாக முனைவர் சிவா முனைவர் சேவற்கொடியோன் முனைவர் கற்பகம் பேராசிரியர் ஆதிமூலம் சிறப்பாகஆய்வுசெய்து மாணவ மாணவிகளை உற்சாகப்படுத்தினர். பள்ளியின் நிர்வாகி ஜான் பிரிட்டோ அமலா ன் அனைவரையும் வரவேற்றார். சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் வடிவேல் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். பங்கேற்க்ஷ அனைத்து மாணவந்மாணவிகளுக்கும் பங்கேற்பாளர் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்க பட்டனர். அறிவியல் இயக்கமாநில செயற்குழு உறுப்பினர் முனைவர் கோபிநாத் மாவட்டச் செயலாளர் பிரபு மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் கிளைச் செயலாளர் ராஜா சரவணன் வானவில் மன்ற கருத்தாளர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பள்ளியின் முதல்வர் ஜெயந்தி மகிழ் முற்றம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி அறிவியல் கண்காட்சிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர். பள்ளியின் துணை முதல்வர் குணசேகரன் நன்றி கூறினார்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற

# மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்ட குழுக் கூட்டம்

### பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (02.03.2026) அன்று ஈரோடு மாவட்ட வளர்ச்சிதிட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்ட குழுக் கூட்டம் மாவட்ட ச.கந்தசாமி தலைமையில் ஆட்சித்தலைவர் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள். ஈரோடு மாவட்டத்தில் சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதன்படி, சத்தியமங்கலம் மற்றும் அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மலை கிராமங்களுக்கு மண்சாலை அமைப்பது தொடர்பாகவும். பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் தொடர்பாகவும், மின் பகிர்மான வட்டத்திற்கு நிலுவை மின்கட்டணத்தை செலுத்துதல் தொடர்பாகவும், பிறப்பு மற்றும் இறப்பு பதிவில் தாய் தந்தையின் ஆதார் விவரங்கள் இணைப்பது தொடர்பாகவும், மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் காலிப்பணியிடங்களை நிரப்பப்படுவது தொடர்பாகவும், தாளவாடி பகுதிகளில் கான்கிரீட் சாலை மற்றும் பாதுகாப்பான கம்பி வேலி அமைப்பது தொடர்பாகவும், கழிவு நீர் வடிகால் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு கழிவு நீர் வெளியே செல்லாதவாறு உறிஞ்சுகுழி அமைக்கப்படுவது தொடர்பாகவும், நில உரிமை மாற்றம் செய்து வழங்கப்படுவது தொடர்பாகவும். குடிநீர் குழாய் பதிக்கும் பணியினை மேற்கொள்வது தொடர்பாகவும், குடிநீர் உந்து தொட்டி அமைக்க நிலம் தெரிவு செய்வது தொடர்பாகவும், சாலை குறுகலாக உள்ள இடங்களில் சாலை அகலப்படுத்துதல் உள்ளிட்டவை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், ஒருங்கிணைந்து பணியாற்றிய அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்து, முழு இலக்கினையும் அடைந்திட மேலும் சிறப்பாக பணியாற்றிடுமாறும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார். மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை மற்றும் திட்ட இயக்குநர் பிரியா, ஈரோடு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தன். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (2.3.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் எதிர்வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ல், அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் செலவினங்களில் விலை பட்டியல் நிர்ணயம் செய்வது தொடர்பாக அனைத்து பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதய நிதி (3.3.2026) நேற்று சென்னை குறிஞ்சி இல்லத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம், திறனகம்/மாவட்ட திறன் மையத்தினை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் முதல் தளத்தில் திறனகம்/ மாவட்ட திறன் மையத்தினை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், கோவை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) ஜோதிமணி உட்பட பலர் உடனிருந்தார்கள்.

### மலேசியாவில் ஆர்டி ஈஷா நிறுவனம் சார்பில்

## கோவை ஜோதிடர் ஸ்ரீ ருத்ர மணிகண்டனுக்கு வளர்ந்து வரும் தொழில்முனைவோர் 2026 விருது




ஜோதிடத்தில் சிறந்து விளங்கும் கோவையைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீ ருத்ர மணிகண்டனுக்கு மலேசியாவைச் சேர்ந்த ஆர்டி ஈஷா நிறுவனம் சார்பில் வளர்ந்து வரும் தொழில் முனைவோர் 2026 என்றசிறந்தஜோதிடருக்கானவிருது வழங்கப்பட்டது.

மலேசியாவைச் சேர்ந்த ஆர்டி ஈஷா ஹோல்டிங் எஸ்டிஎன் பிஎச்டி நிறுவனம் சார்பில் புதிய தொழில்முனைவோர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வது, அவர்களின் கடின உழைப்பை அங்கீகரிப்பது மற்றும் அவர்கள் தங்கள் தொழில்களை வளர்த்தும் நிலைநிறுத்தியும் வரும் முயற்சிகளை பாராட்டும் வகையில் ஆண்டு தோறும் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் தொழில் முனைவோர்களைதேர்ந்தெடுத்துபாராட்டிவளர்ந்து வரும் தொழில் முனைவோர் என்ற விருதுகள் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல் இந்த ஆண்டும் 2026 ம் ஆண்டில் வளர்ந்து வரும் தொழில் முனைவோர் விருதுகள் வழங்கும் விழா மலேசியா ஜொகூரில் உள்ள டி பார்ட்யூன் அரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக டத்தோ டூடா டாக்டர் சந்திரன், டத்தோ தென் அரசு சுப்பையா, சைலஜா செல்வீகம், டாக்டர் சங்கர பிள்ளை, டத்தோ புவனேஷ்வரன் நெடுஞ்செழியன் என்கிற டத்தோ சத்யா, பிரகாஷ் குமார் மற்றும் அக்கீம் மரியம் ஆகியோர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினர்.

இந்த விழாவில் 35 தொழில் முனைவோர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இதில் ஜோதிடத்தில் சிறந்து விளங்கும் கோவையைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீ ருத்ர மணிகண்டனுக்கு வளர்ந்து வரும் தொழில் முனைவோர் 2026 என்ற சிறந்த ஜோதிடருக்கான விருது வழங்கப்பட்டது.

## கோவை அரசூர் பகுதியில் உள்ள, கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் மாணவர் நலக்குழு சார்பில் யுகந்தா 26 எனும் கல்லூரி அளவிலான கலை விழா நடைபெற்றது



கோவை அரசூர் பகுதியில் உள்ள, கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் மாணவர் நலக்குழு சார்பில் யுகந்தா 26 எனும் கல்லூரி அளவிலான கலை விழா நடைபெற்றது இந்நிகழ்விற்குக் கல்லூரியின் தலைவர் டாக்டர் இராமசாமி தலைமையேற்று "இளைய தலைமுறையினர் கல்வியோடு கலையார்வம் கொண்டவர்களாகத் திகழ்ந்து சமூகத்தின் உயர்வுக்குத் துணைநிற்க வேண்டும்" எனக் கூறினார். அவரைத்தொடர்ந்து கல்லூரியின் நிர்வாக இயக்குநர் சிகாமணி "ஆற்றலுடன் முயற்சி செய்தால் வெற்றியை அடையலாம்" எனக்கூறி சிறப்புரை வழங்கினார். கல்லூரியின் செயலர் காயத்ரி அனந்தகிருஷ்ணன் "மாணவர்களின் வளர்ச்சி தன் ஆற்றலை வெளிப்படுத்தும் போதே தொடங்குகிறது" எனக்கூறி வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் முனைவர் கீதா "இலக்கினை அடைய துணிந்து செயலாற்றும் மாணவர்கள் வெற்றியை அடைவது உறுதி" எனக்கூறி மகிழ்வுரையாற்றினார். யுகந்தா 26 நிகழ்வில் கல்லூரி மாணவர்களுக்கான முகவோவியம், நக அலங்காரம், மெஹந்தி, குழு நடனம், ரீல்ஸ் உருவாக்கம், ஆடை அணிவகுப்பு, கனெக்ஷன், புகைப்படப்போட்டி, வண்ணந்தீட்டுதல், மிஸ்டர் அண்ட் மிஸ் யுகந்தா முதலிய கலைப்போட்டிகள் நடைபெற்றது.

இப்போட்டிகளில் தம் தனித்துவமான பங்களிப்பைத் தந்து வணிகவியல் துறையானது யுகந்தா 26 சுழற்கோப்பையை வென்றது. இந்நிகழ்வையொட்டிக் கல்லூரி வளாகத்தில் உணவு, உடை, சிற்றுண்டி, ஓவியங்கள், அழகுசாதனப்பொருட்கள், பயன்பாட்டுப்பொருள்கள் எனப் பல்வேறு வகையான கடைகள் அமைக்கப்பட்டன. இந்நிகழ்வில் வடம் திரைப்படத்தின் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. யுகந்தா 26 விழாவில் சிறப்பு விருந்தினர்களாகத் திரைப்படக்கலைஞர்கள் ஜி.வி.பிரகாஷ், விமல் முதலியோரும் திரையிசைப்பாடகர்கள் பிரியாஜெர்ஷன், பிரசன்னா மற்றும் டிஜே மதன் ஆகியோர் கலந்துகொண்டனர். யுகந்தா 26 கலை விழாவில் கலந்துகொண்டோரை மாணவர் நலக்குழுவின் புலமுதன்மையர் முனைவர் பி.ஷர்மிளா வரவேற்றார். இக்கலைவிழாவில் கல்லூரியின் நிர்வாக உறுப்பினர்கள், புலமுதன்மையர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலக உறுப்பினர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## தூத்துக்குடியில் விக்டோரியா மகளிர் மேல்நிலைப்பள்ளியில்

## 11ம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு 451 பேருக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்

தூத்துக்குடி விக்டோரியா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமையில், பள்ளியின் தாளாளர் சுதன் ஹீலர், தலைமையாசிரியர் ஜேஸ்பின் வசந்தி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கீதாஜீவன் கலந்து கொண்டு 451மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வாங்கினார்.

பின்னர் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்; தூத்துக்குடி விக்டோரியா பள்ளியில் மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லாமிதிவண்டிகளை வழங்குவதில் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது. ஏனென்றால் நானும் இந்த பள்ளியில் முன்னாள் மாணவி தான். வாய்ப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி. தமிழ்நாடு அரசு எப்பொழுதும் தம் மக்களுக்கான அரனாக செயல்படுகிறது. 2021ல் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றபோது கொரோனா பேரிடர் மிகப்பெரிய சவாலாக இருந்த நிலையில் பிற மாநிலங்கள் எல்லாம் கடும் நெருக்கடியில் இருந்தபோது தமிழ்நாட்டில் கொரோனா பேரிடரை வெற்றிகரமாக சமாளித்து பல்லாயிரக்கணக்கானோரை உயிரிழப்பிலிருந்து மீட்டோம். கல்வியில் இந்த ஐந்து ஆண்டுகளாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான சிறப்பான பாடத் திட்டங்களுடன் நல்ல பயிற்சிகள், ஆய்வகங்கள் திறமையான ஆசிரியர்கள் மற்றும் நவீன வசதிகள் எல்லா பள்ளிகளிலும் நமக்கு உருவாக்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகளின் கற்றலுக்கான ஆர்வத்தை தூண்டும் விதமாக புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் திட்டம் திறன் மேம்பாட்டு பயிற்சி, உலகம் உங்கள் கையில் திட்டம் என அனைத்து வகையிலும் முதன்மை மாநிலமாக முதலமைச்சர் தலைமையில் தலைநிமிர்ந்து நிற்கிறோம்.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்குதல் மாணவிகளுக்கு ஊக்கமும் உற்சாகம் தருவதாக உள்ளது. இந்தியாவில் கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மருத்துவத்தில் நம்பர் ஒன் மாநிலம், பொருளாதார வளர்ச்சியில் 11.19% வளர்ச்சியுடன் முதலிடம், உற்பத்தி திறனில், தொழில் வளர்ச்சியில், மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதன்மை மாநிலம், தனிநபர் வருமானம் அதிகரிப்பு அதேபோல வறுமை கோடுபட்டியல் கீழே உள்ளவர்களுடைய எண்ணிக்கை குறைந்து உள்ளது இவ்வாறு நம்முடைய முதலமைச்சர்ஸ்டாலின்ஆட்சி பொறுப்பேற்ற ஐந்து ஆண்டு காலத்தில் தமிழ்நாடு மிகப்பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது. அனைத்திலும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. நம்முடைய முதலமைச்சர் மாணவர்களுக்கு சொல்வது நீங்க படிங்க படிங்க மத்தது எல்லாம் நான் பாத்துக்கிறேன் என்பது தான். மாணவப் பருவத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலை படிப்பு மட்டும்தான் ஆகவே நீங்கள் ரொம்ப ஈடுபாட்டுடன் எதையும் ஒதுக்காமல் அனைத்தையும் படிங்க, உங்க அறிவாற்றலை விருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு படிக்க வேண்டும். உங்களை சிறந்த கல்வியாளர்களாக சிறந்த அறிவாற்றல் மிக்கவர்களாக நீங்கள் உங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உங்களது உயர்கல்விக்கு வழிகாட்டியாக நான் முதல்வன் திட்டம் விளங்குகிறது. இந்த பள்ளியானது திறமையான தரமான பள்ளியாக சிறந்த வருங்கால சந்ததியினரை உருவாக்கக்கூடிய பள்ளியாக விளங்கி வருகிறது. நானும் இந்த பள்ளியின் படித்துதான் உயர்வடைந்து உங்கள் முன் நல்ல மக்கள் பிரதிநிதியாக இருந்து வருகிறேன். நீங்களும் நல்ல முறையில் பயின்று பயனடைந்து உங்களை மேம்படுத்திக் கொண்டு சிறந்த கல்வியாளர்களாக உருவாக வேண்டும் என்று வாழ்த்தி நம்முடைய பள்ளிதாளாளர் மற்றும் தலைமையாசிரியர் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் நன்றி என அமைச்சர் கீதா ஜீவன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் சுரேஷ்குமார், மாவட்ட திமுக பிரதிநிதி சக்திவேல், அறங்காவலர் குழு தலைவர்கள் செந்தில்குமார், கந்தசாமி, மருத்துவர் அணி தலைவர் அருண்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா

## அச்சிறுப்பாக்கம் அருகே பெரும்பேர்கண்டிகையில் முதியோர் இல்லத்தில் ஒன்றிய செயலாளர் டி.வி. கோகுலகண்ணன் அன்னதானம் வழங்கினார்



காஞ்சி தெற்கு மாவட்டம் பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 73-வது பிறந்தநாள் விழாவையொட்டி பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நல்லாசியுடன் தமிழகம் முழுவதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக காஞ்சி தெற்கு மாவட்ட மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் ஆலோசனைப்படி அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் கழககொடி ஏற்றி பேரறிஞர் அண்ணா திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து முதலமைச்சரின் புகழாரம் கூறி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பெரும்பேர்கண்டிகையில் உள்ள முதியோர் இல்லத்தில் முதியவர்களுக்கு அறுசுவை உணவு கோகுலக்கண்ணன் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி.வி. தலைமையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர் பார்த்தசாரதி, ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர், மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் ஜி.சிவக்குமார், ஒன்றிய ஆதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் தரு. லட்சுமணன், ஒன்றிய நிர்வாகிகள் கருணாகரன், சீனிவாசன் சுதாகர் ஜெயக்குமார் துரை கணேஷ் செந்தில்குமார் பத்மநாபன் குமரேசன் யுவன்சங்கர் ராஜ் சம்பத் சத்யராஜ் சுரேஷ்குமார் நவீன் குமார் சிவனேசன் குமரவேல் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் ரகுராமன், ராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் சு.முத்துசாமி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நிபந்தனைப்பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி 113 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், அந்தியூர் சிறப்புநிலை பேரூராட்சி, சமுதாய கூடத்தில் நேற்று (03.03.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நிபந்தனைப்பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி 113 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் கட்டணமில்லா விடியல் பயணம், உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி திட்டம். இல்லத்தரசிகளுக்குமாதம்ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமைத்திட்டம், மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் உங்களுடன் ஸ்டாலின், மக்களின் நலனை காக்கும் வகையில் மக்களை தேடி மருத்துவம் மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம், முதியோர்களுக்கான அன்புச்சோலை திட்டம், மலையிலிருந்து வரும் நீரை பொதுமக்களுக்கும் விலங்களுக்கும் பயன்பெறும் வகையில் அந்தியூர் தோனிமடுவு திட்டம். உயர்கல்வி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம், 60 ஆண்டுகளாக மின் இணைப்பு இல்லாத கத்திரி மலைக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி குழந்தைகளுக்கு சோர்வின்றி கல்வி பயில முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல்பரிசு தொகுப்புடன் ரொக்கம் ரூ.3000/ வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எனவே பொதுமக்கள் இத்தகைய அரசு நலத்திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க அந்தியூர் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் நிபந்தனை பட்டாக்களை நிபந்தனையற்ற பட்டாக்களாக மாற்றி வழங்க ஆணையிட்டு இருந்தார். அதனை தொடர்ந்து நேற்றைய தினம் வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் அந்தியூர் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் நிபந்தனைப்பட்டாக்களை அயன்பட்டாவாக மாற்றி 113 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

முன்னதாக, வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, மைக்கேல் பாளையம் ஊராட்சி, காந்தி நகர், ஜி.எஸ். காலனி பகுதியில் கட்டப்பட்டுள்ள காந்தி நினைவு மண்டபத்தினை திறந்து வைத்து, புனரமைக்கப்பட்ட காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாச்சலம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காளப்பநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அனன்யா செல்டர்ஸ் சார்பில் ரூ.ஒரு கோடி மதிப்பில் கட்டிடம்; மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி கிரியப்பனவர் திறந்து வைத்தார்



கோவை கணுவாய் அருகே காளப்பநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் அனன்யா செல்டர்ஸ் சார்பில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் கட்டி கொடுக்கப்பட்ட பள்ளி கட்டிடம் மற்றும் உணவு கூடத்தை அதன் நூற்றாண்டு விழாவில் பங்கேற்ற கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி கிரியப்பனவர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கோயம்புத்தூர் மாவட்டம் கணுவாய் அருகே 1925ம் ஆண்டு தொடங்கப்பட்ட காளப்பநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உள்ளது. இப்பள்ளி 100 ஆண்டுகள் ஆவதை ஒட்டி பள்ளியின் நூற்றாண்டு விழா, பள்ளிநூற்றாண்டு நினைவு கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் பள்ளி கட்டிடங்களை கட்டித் தந்த அனன்யா குழுமத்திற்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு முதன்மை விருந்தினராக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் ஜி கிரியப்பனவர் கலந்து கொண்டு அனன்யா செல்டர்ஸ் சார்பில் ரூபாய் 1 கோடி மதிப்பில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடங்கள் மற்றும் உணவு கூடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆட்சியர் கல்வி மலர் புத்தகத்தை வெளியிட்டு நன்கொடையாளர்களை பாராட்டி னார். சிறப்பு விருந்தினர்களாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், கோயம்பததூர் மாவட்ட முதன்மைகல்விஅலுவலர் பாலமுரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு பள்ளியின் மேனாள்தலைமைஆசிரியரும் பள்ளியின் மூத்த மாணவருமான பொ. ராமலிங்கம் தலைமை வகித்தார். விழாவிற்கு வந்திருந்தவர்களை பள்ளியின் ஆசிரியர் சுகுணா வரவேற்று பேசினார். விழாவில் ஏற்புரையாற்றிய அனன்யா குழுமத்தின் இணை நிர்வாக இயக்குனர் உமா மகேஸ்வரி யுவராஜ் பேசும்போது அனன்யா குடும்பத்தின் சார்பில் மூத்த குடிமக்களுக்கு எண்ணற்ற சேவைகளையும், அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதில் இந்தியாவிலேயே முன்னணி நிறுவனமாக அனன்யா குழுமம் இருப்பதில் பெருமை கொள்கிறோம்.

நாம் வாழும் இந்த சமுதாயத்திற்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற கருத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், சோமையம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு எங்களது பெரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வு மூலம் இப்பள்ளியின் 1 கோடி ரூபாய் மதிப்பில் கட்டிடங்களை புணரமைத்தும் உணவுக்கூடத்தை உணரமைத்தும் கொடுத்துள்ளோம்.

இங்கு பயிலும் மாணவர்கள் நல்ல முறையில் பயின்று வரும் காலங்களில் மிகப்பெரிய அரசு பணிகளிலும், தொழிலதிபர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் வர வேண்டும்என்பதேஎங்கள் நோக்கம். இனிவரும் காலங்களில் அனைத்து விதமான உதவிகளும் செய்ய நாங்கள் தயாராக உள்ளோம். இங்குள்ள மாணவர்கள் இப்பள்ளியின் வளத்தையும் சுற்றுப்புற சூழலையும் முறையாக பராமரிக்க வேண்டும் என்று பேசினார். மேலும்விழாவில் கோயம்பத்தூர் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் உயர் பெ இரவிச்சந்திரன், பெரியநாயக்கன்பாளையம் வட்டார கல்வி அலுவலர்1இராராஜேந்திரன், வட்டார கல்வி அலுவலர் 2 சி இராஜம்மாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா முடிவில் பள்ளி ஆசிரியர் ஆரோக்கியதாஸ் நன்றி உரையாற்றினார். இதைத்தொடர்ந்து மாலை 5 மணிக்கு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. விழாவில் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் ஊர் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக மாவட்ட திறன் மையத்தினை துவக்கி வைத்ததைத்தொடர்ந்து,

## அமைச்சர் முத்துசாமி வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ரோடு, மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் (03.03.2026) வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும்பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர்அவர்கள் 2024-2025 அறிவிப்பில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட திறன் மையம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு மாநிலத்தின் அனைத்து (38) மாவட்டங்களிலும் மொத்தம் ரூ.5.96 கோடி மதிப்பீட்டில் "திறனகம்" எனும் சிறப்பு மாவட்ட திறன் மையங்களை நிறுவப்பட்டது. இம்மையங்கள், இளைஞர்களின் தொழில் விருப்பங்களை தொழில்துறை தேவைகளுக்குகேற்ப திறன்களுடன் ஒருங்கிணைத்து, நிலையான மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்பைப் பெற வழிகாட்டும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த மையங்களாக செயல்படுகின்றன.

ஒவ்வொரு திறனகமும் ஒரே இடத்தில் தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு ஆலோசனை, பயிற்சி இணைப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றை வழங்கும் ஒருங்கிணைந்த சேவைமையமாகசெயல்படுகிறது. இம்மையமானது மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டலில் மாவட்ட திறன் அலுவலர்களால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் (TNSDC) ஆதரவுடன் நிர்வகிக்கப்படுகின்றன. நேற்றைய தினம், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 23 திறனகங்களை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இது மாநிலம் முழுவதும் மாவட்ட அளவிலான திறன் மேம்பாட்டு கட்டமைப்பை வலுப்படுத்தும் முக்கிய கட்டமாகும். இத்திட்டங்கள் இளைஞர்களின் திறன் மேம்பாடு மூலம் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்தும் விதமாக இருக்கும்.

நேற்றைய தினம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வெற்றி நிச்சயம் திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். தொடர்ந்து, ஈரோடு மாவட்டத்தில் திறன் பயிற்சி பெற்ற 5 நபர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், கோவை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ரா.ராதிகா மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சண்முக வடிவு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் டி.டி.சாந்தி, மற்றும் மாவட்ட திறன் அலுவலர் கா.து.கவிதா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.